வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி : 13.06.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி 6 நாள் அரசுமுறை பயணமாக பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவிற்குச் சென்றுள்ளார்.
- புதுமை, விழிப்புணர்வு மற்றும் தொடர் கற்றல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.
- நாடு முழுவதும் ஓட்டுநர் பயிற்சி மையங்களை அமைக்கும் பணிகளை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை தொடங்கியுள்ளதாக திரு. நிதின் கட்கரி குறிப்பிட்டார்.
- ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

<u>*மோடி-1 (05)*</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி 6 நாள் அரசுமுறை பயணமாக பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவிற்குச் சென்றுள்ளார். இந்தியாவிற்கும் பிரான்சுக்கும், இடையிலான பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதே இப் பயணத்தின் நோக்கம் என்று பிரதமர் கூறியுள்ளார்.

*மோடி -2 வாய்ஸ் (16)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை பிரெஞ்ச் அதிபர் திரு.இமானுவேல் மேக்ரானுடன் இணைந்து, “பாரத் இனோவேட்ஸ் திட்டத்தை” தொடக்கி வைக்கவுள்ளார். இத்திட்டம், இந்தியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய புத்தொழில் நிறுவனங்களை உலகளாவிய முதலீட்டுடன் இணைப்பதோடு இந்தியாவின் உயர் கல்விக்கான சூழலை உருவாக்கும் உந்து சக்தியாக விளங்கும் என்று பிரதமர் கூறினார். இதைத் தொடர்ந்து திரு. மோடி 2 நாள் பயணமாக நாளை ஸ்லோவாக்கியாவிற்கு புறப்படுகிறார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் உள்ள வலுவான உத்வேகத்தை இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணம் மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். ஸ்லோவாக்கியா ஒரு முக்கியமான உறுப்பினராக விளங்கும், ஐரோப்பிய ஒன்றியத்துடனான இந்தியாவின் கூட்டாண்மைக்கு இந்தப் பயணம் புத்துணர்ச்சி அளிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார். தொடர்ந்து, பிராட்டிஸ்லாவாவில் ஸ்லோவாக்கிய அதிபர் திரு. பீட்டர் பெல்லெக்ரினி மற்றும் அந்நாட்டுப் பிரதமர் திரு. ராபர்ட் ஃபிகோ ஆகியோரை பிரதமர் சந்திக்கவுள்ளார்.

*மோடி -3 வாய்ஸ் (16)*

ஸ்லோவாக்கியாவுக்கான தனது பயணத்தை நிறைவு செய்த பிறகு பிரதமர் திரு. நரேந்திர மோடி பிரான்சின் எவியான் நகருக்குப் பயணம் மேற்கொண்டு, வரும் 16 மற்றும் 17ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள ஜி-7 உச்சி மாநாட்டிலும் பங்கேற்கிறார். இந்த 8ஆவது ஜி-7 மாநாட்டில் இந்தியாவின் பங்கேற்பு, நாட்டின் வளர்ந்து வரும் உலகளாவிய செல்வாக்கின் மீது அதன் கூட்டாளிகள் வைத்துள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கிறது என்று வலியுறுத்தினார். பிரதமரின் இந்தப் பயணத்தின் இறுதிக் கட்டமாக வரும் 18-ஆம் தேதி, பிரெஞ்ச் அதிபர் திரு. இமானுவேல்

மேக்ரோனுடன் இணைந்து விவாடெக்-2026 மாநாட்டிலும் கலந்து கொள்கிறார். பாரீசில் உள்ள இந்திய சமூகத்தினரை சந்திக்க தாம் ஆவலுடன் இருப்பதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். ஸ்லோவாக் குடியரசுக்கான இந்தியத் தூதர் திரு. அபூர்வா ஸ்ரீவத்சவா, இந்திய-ஐரோப்பிய ஒன்றிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஏற்கனவே, 1.8 பில்லியன் அமெரிக்க டாலர்களை தாண்டி விட்டது என்றும் குறிப்பிட்டார்.

*ராஜ்நாத் சிங் (18)*

மாறி வரும் பாதுகாப்பு சூழலுக்கு ஏற்ப ட்ரோன்கள், செயற்கைக் கோள்கள் மற்றும் ரோபோட்டிக்ஸ் போன்ற நவீன போர் தொழில்நுட்பங்களுக்கு தங்களை மாற்றிக் கொள்ளுமாறு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார். ஹைதராபாத்தின் துண்டிகலில் உள்ள விமானப்படை அகாடெமியில் இன்று நடைபெற்ற 217-ஆவது பயிற்சிப் பிரிவின் கூட்டு பட்டமளிப்பு அணிவகுப்பை ஆய்வு செய்த அவர், புதிதாக பணியில் இணைந்துள்ள இந்திய விமானப்படை அதிகாரிகளிடையே உரையாற்றினார். பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், புதுமை, விழிப்புணர்வு மற்றும் தொடர் கற்றல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். நவீன போர் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், வளர்ந்து வரும் போர் அமைப்புகள் மற்றும் உத்திகள் குறித்து அதிகாரிகள் தங்களை தொடர்ந்து புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இன்றைய போர்க்களங்களில் ரேடார்கள், செயற்கைக் கோள்கள், உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதால், அச்சுறுத்தல்கள் மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளதாவும் அவர் கூறினார். இவ்விழாவில் வான் சாகச நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

*<u>மோடி சாதனை (18)</u>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 12 ஆண்டு கால சாதனைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை எடுத்துரைக்கும் வகையில், நாக்பூரில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மத்திய போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி, உள்கட்டமைப்பு மேம்பாட்டுடன் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு போக்குவரத்து அமைச்சகம் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார். நாடு முழுவதும் ஓட்டுநர் பயிற்சி மையங்களை அமைக்கும் பணிகளை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை தொடங்கியுள்ளதாக திரு. நிதின் கட்கரி குறிப்பிட்டார். ஜனவரி 2025-ல் அறிவிக்கப்பட்ட கொள்கையின்படி, நாடு முழுவதும் மொத்தம் ஆயிரத்து 600 மையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 24 மையங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மேலும், 112 மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், இதுவரை சுமார் 10 லட்சம் பேர் இம்மையங்கள் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். இத்தகைய அனைத்து மையங்களும் முழுமையாக செயல்படத் தொடங்கும் போது ஆண்டுதோறும் சுமார் 1.15 கோடி பேர் ஓட்டுநர் பயிற்சி பெறுவார்கள் என்றும், இதன் மூலம், குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

*<u>மோடி சாதனை -2 (09)</u>*

மத்திய அரசின் பல்வேறு நலத்திட்டங்களை ஆய்வு செய்த அவர், கடந்த 12 ஆண்டுகளில் பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் 58 கோடிக்கும் அதிகமான வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், ஆயுஷ்மான் பாரத் திட்டம் மூலம் 60 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர் என்றும் போக்குவரத்து துறை அமைச்சர் தெரிவித்தார். மேலும், பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் கீழ் 11 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன

என்றும், பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ் 11 கோடி விவசாயிகள் ஆண்டுதோறும் நிதியுதவி பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

***<u>யாத்ரி சுவிதா திவஸ் (09)</u>***

நாடு முழுவதும் அனைத்து விமான நிலையங்களிலும், வரும் 15ஆம் தேதி விமானப் பயணிகளின் நலனை முன்னெடுக்கும் யாத்ரி சுவிதா தினம் நிகழ்ச்சி நடைபெறவுள்ள நிலையில் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பில் கோவை விமான நிலைய விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருவதாக அதன் இயக்குநர் திரு. முகமது ஆரீஃப் தெரிவித்துள்ளார். விமானப் பயணிகளுக்கு சிறந்த சேவையின் ஒரு பகுதியாக மருத்துவ பரிசோதனைகள், வேலை வாய்ப்பு ஆலோசனை, குழந்தைகளுக்கான ஓவியப்போட்டி உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

***<u>புதுச்சேரி எல். முருகன் – 1 (18)</u>***

ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார். மேகதாது அணை குறித்து பேசிய அவர், 2 மாநிலங்களின் நலனை பாதிக்காதவாறு நடவடிக்கை இருக்க வேண்டும் என்றும், மாநிலங்களுக்கு இடையேயான பாகுபாடு இருக்கக் கூடாது என்றும் கூறினார். புதுச்சேரியில் உள்ள பிஜேபி அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், பாரத பிரதமராக தொடர்ச்சியாக திரு.நரேந்திர மோடி பதவி வகித்து 4 ஆயிரத்து 402 நாட்கள் கடந்துள்ளதாகவும், தலைசிறந்த பிரதமராக உலகத்திற்கு வழிகாட்டும் தலைவராக திரு. மோடி திகழ்வதாகவும் பெருமிதம் தெரிவித்தார். 12 ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்த திரு. மோடி, மக்களின் நம்பிக்கை மற்றும் வளர்ச்சி என சிறப்பான ஆட்சியை செய்து வருவதாகவும், நாட்டின்

உள்கட்டமைப்பு, வளர்ச்சி அடைந்திருப்பதாகவும், கூறினார். 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்றும், 12 கோடிக்கும் அதிகமான கழிவறைகள் கட்டப்பட்டுள்ளது என்றும் கூறிய அவர், ஏழை எளிய மக்கள், பெண்கள், விவசாயிகள் ஆகியோரின் நலனில் அக்கறை கொண்டு பிஜேபி செயல்பாட்டின் மூலம் 58 கோடி பேருக்கும் அதிகமான ஜன்தன் வங்கி கணக்கு தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

***<u>புதுச்சேரி எல். முருகன் -2 வாய்ஸ் (03)</u>***

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 12 ஆண்டு கால ஆட்சியில் புதுச்சேரிக்கு அளிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து டாக்டர் எல்.

***<u>புதுச்சேரி எல். முருகன் -3 (09)</u>***

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 12 ஆண்டு கால சாதனைகளைக் குறிக்கும் வகையில், புதுச்சேரி, முதலியார்பேட்டையில் உள்ள அன்னை சிவகாமி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றினை நட்டார். இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர் திரு. நமசிவாயம், பிஜேபி தலைவர் திரு.ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான்குமார் மற்றும் பிஜேபி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பின்னர், புதுச்சேரி, ரயில் நிலையத்திற்குச் சென்ற டாக்டர் எல்.முருகன், ரயில் நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தார்.

***<u>ராணுவ தலைமை தளபதி (13)</u>***

வரும் 30ஆம் தேதி முதல், லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத்-தை ராணுவ தலைமை தளபதியாக மத்திய அரசு நியமித்துள்ளது. தற்போது ராணுவ துணை தலைமை தளபதியாக பணியாற்றி வரும் அவர், 1986 டிசம்பரில் கவசப் படையில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார் என்று

பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அவரது நீடித்த, சிறப்பான ராணுவ வாழ்க்கையில், செயல்பாடு, உத்திசார் திறன் மேம்பாடு மற்றும் நிறுவன ரீதியான துறைகளில் விரிவான அனுபவம் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. லெப்டினன்ட் ஜெனரலாக இந்திய ராணுவத்தின் முதன்மையான தாக்குதல் பிரிவுகளில் ஒன்றான சுதர்சன் சக்ரா படை பிரிவுக்கு அவர் தலைமை தாங்கினார். அதனைத் தொடர்ந்து டெல்லி பகுதியில் ஜெனரல் ஆபீஸர் கமாண்டிங்-காக பணியாற்றி தேசிய மற்றும் சர்வதேச ராணுவ ஈடுபாடுகள் மற்றும் முக்கிய பொறுப்புகளை மேற்பார்வையிட்டார்.

***<u>விமான விபத்து (12)</u>***

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான AN-32 வகை போக்குவரத்து விமானம் ஒன்று, இன்று காலை அஸ்ஸாமில் உள்ள ஜோர்ஹாட் விமானப் படை தளத்தில் வழக்கமான பணியின்போது விபத்துக்குள்ளானது. விபத்தில் 5 வீரர்கள் உயிரிழந்ததற்கு, இந்திய விமானப்படை இரங்கல் தெரிவித்துள்ளது. இச்சம்பவத்தில் ஸ்குவாட்ரன் லீடர் பிரசாந்த் சிங், ஃபிளைட் லெப்டினன்ட் ஷுபம் குமார், சார்ஜன்ட் ஜிதேந்திர ஷர்மா, அக்னி வீர் வாயு கேமரம் குமாவத் மற்றும் அக்னி வீர் வாயு டேனிஷ் ஆலம் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக இந்திய விமானப்படை வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு விமானப்படை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும், இந்த துயர நேரத்தில் அவர்களுடன் உறுதுணையாக நிற்பதாகவும் கூறியுள்ளது.

***கால்பந்து (05)***

உலக கோப்பை கால்பந்து போட்டியில் இன்று காலை நடைபெற்ற ஆட்டத்தில் அமெரிக்க 4-1 என்ற கோல் கணக்கில் பராகுவே-வை வென்றது. நள்ளிரவு 12.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கத்தார், ஸ்விட்சர்லாந்தையும், நாளை அதிகாலை 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பிரேசில், மொரோக்கோவையும் எதிர்கொள்கின்றன.